සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

## දෙවන වාර පරීක්ෂණය - 2025
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025 / Second Term Test - 2025

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | **கணிதம் - I** | කාලය / நேரம் / Time: 02 மணி. |

නම / பெயர் / Name ........................................................................................ විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. .....................................

- **எல்லா வினாக்களுக்குமான விடைகளை இப்பத்திரத்தில் வழங்கவும்.**
- **பகுதி A இன் சகல சரியான விடைகளுக்கும் 2 புள்ளிகள் வீதமும் பகுதி B இன் ஒவ்வொரு வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வீதமும் புள்ளி வழங்கப்படும்.**

### பகுதி A

1. 6 மனிதர்கள் 7 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 3 நாட்களில் செய்து முடிக்க எத்தனை மனிதர்கள் தேவை

2. இடைவெளி நிரப்புக. $(2x + 3)2 = \ldots\ldots\ldots\ldots + 12x + \ldots\ldots\ldots\ldots$

3. படத்தில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய x இன் பெறுமானம் காண்க.




4. நிமிடத்திற்கு 120 l எனும் வீதத்தில் பாயும் நீர் பம்பி , நீர்த் தாங்கியொன்றின் சரிபாதி நிரப்புதற்கு 5 நிமிடங்கள் எடுத்தன. நீர்த் தாங்கியின் கனவளவைக் காண்க.

5. x இன் பெறுமானத்தைக் காண்க




6. தீர்க்க

$$\frac{1}{x} + \frac{1}{2x} = \frac{1}{4}$$

7. $\log_6 216 = 3$ எனின் 216 என்பதை 6 இன் வலுவாகத் தருக

8. வென் உருவில் $A \cap B'$ பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.




9. 2,5,x,4,8 எனும் எண் கூட்டத்தின் இடை 5 எனின் x இன் பெறுமானம் காண்க

10. $4a^2b$ , $2b^3c$ இன் பொது மடங்குகளில் சிறியதைக் காண்க

11. படத்தில் AB மற்றும் CD எனும் நேர் கோடுகள் O வில் வெட்டுகிறது AO= OB எனின் முக்கோணிகள் AOC மற்றும் BOD என்பன ( ப.கோ.ப) எனும் சந்தர்ப்பத்தில் ஒருங்கிசைவதற்கு சமமாக வேண்டிய அடுத்து இரு பக்கங்களும் எவை




12. 4 % மாத எளிய வட்டிக்கு ரூபா 20 000 கடனாகப் பெற்ற சமன் ஒரு மாத முடிவில் கடனில் இருந்து விடுபட செலுத்த வேண்டிய முழுத் தொகையைக் காண்க.

13. படத்தில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய நேர் கோடு AB இன் சமன்பாட்டைக் காண்க.



14. கீழே தரப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய $\sqrt{73}$ இன் பெறுமானம் காண்க

| x | 8.4 | 8.5 | 8.6 | 8.7 |
|---|---|---|---|---|
| $x^2$ | 70.56 | 72.25 | 73.96 | 75.69 |

15. தீர்க்க $(x-4)(x+1)=0$

16. படத்தில் AD= DB = BC ஆகும் $D\hat{B}C = 40^0$ எனின் $B\hat{A}D$ காண்க.




17. $2x^2 + 3x - 5$ எனும் மூவுறுருப்பு இருபடிக் கோவையின் ஒரு காரணி (x-1) எனின் எஞ்சிய காரணியைக் காண்க.

18. ABCD எனும் சதுரத்தில் D இல் இருந்து AB இற்கு வரையப்பட்ட செங்குத்து DX ஆகும். $A\hat{D}X$ இன் பெறுமானம் காண்க.




19. பாத்திரம் ஒன்றினுள் வடிவிலும் அளவிலும் சமனான நீல மற்றும் சிவப்பு நிற முத்துக்கள் 30 உள்ளன. எழுமாறாக ஒரு முத்தை வெளியே எடுத்த போது அது நீல நிறமாக இருப்பதற்கான நிகழ்த்தகவு $\frac{3}{5}$ எனின் பாத்திரத்தில் உள்ள நீல நிற முத்துக்களின் எண்ணிக்கையைக் காண்க.

20. ஆரை 7 cm ஆகவுள்ள வட்டத்தின் பரிதியின் நீளம் 44 cm ஆகும். படத்தில் தரப்பட்டுள்ள அளவுகளுக்கு அமைய நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவைக் காண்க




21. ஒரு நபர் சீரான வேகத்தில் ஈருளியில் வீட்டில் இருந்து 2 km தூரத்தில் உள்ள காரியாலயத்திற்கு செல்வதற்கு 5 நிமிடங்கள் செலவாகிறது. அவன் பயனித்த கதியை மணித்தியாலத்திற்கு கிலோ மீற்றரில் காண்க.

22. ABCD எனும் சரிவகத்தின் பரப்பளவு $66\ cm^2$ எனின் AD இன் நீளத்தைக் காண்க.




23. கீழே தரப்பட்டுள்ள நாற்பக்கல்களில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய இணைகரமாகும் உருவின் கீழ் கோடிடுக.




24. முக்கோண ABC இன் பக்கம் BC யானது D வரை நீட்டப்பட்டுள்ளது. $B\hat{A}C$ மற்றும் $A\hat{B}C$ இன் இரு கூறாக்கிகள் O வில் வெட்டுகின்றது. $A\hat{C}D = 104^0$ எனின் $A\hat{O}B$ இன் பெறுமானம் காண்க.




25. தரப்பட்டுள்ள ABC எனும் முக்கோணியின் A இற்கும் B இற்கும் சமதூரத்திலும் AC இன் மீது உள்ள புள்ளி P ஐ காண்பதற்காக ஒழுக்கு பற்றி அறிவை பயன்படுத்தி படும்படிப்படத்தை வரைந்து புள்ளி P ஐ குறித்துக் காட்டுக.



Past Papers Wiki

## பகுதி B

- **எல்லா வினாக்களுக்குமான விடையை இப்பத்திரத்தில் வழங்குக.**

01. காணொன்றின் முழு நீளத்தின் $\frac{3}{7}$ பகுதியை முதல் நாள் வெட்டப்பட்டது. மீதியின் $\frac{5}{8}$ பங்கு இரண்டாம் நாள் வெட்டப்பட்டது.

    i) முதல் நாள் முடிவில் முழுக் காணின் என்ன பின்னம் வெட்டுவதற்கு எஞ்சியுள்ளது ?

    ii) இரண்டாம் நாள் வெட்டப்பட்ட காண் முழுக் காணிக் என்ன பின்னமாகும் ?

    iii) முதல் இரண்டு நாட்கள் முடிவில் மீதமாகவுள்ள காணின் நீளம் 15 m எனின் காணின் முழு நீளத்தைக் காண்க.

    iv) காணின் 5m நீளத்தை வெட்டுவதற்காக 4 மனித நாட்கள் எடுக்கும் என கணிப்பிட்டப்பட்டுள்ளது எனின் எஞ்சியுள்ள 15m காணை இரண்டு நாட்களில் வெட்டுவதற்கு வேலையில் ஈடுபடுத்தவேண்டிய மனிதர்களின் எண்ணிக்கையை கணிக்க.

02. படத்தில் காட்டப்பட்டுள்ளது அரைவட்ட மற்றும் செவ்வக வடிவான பகுதிகளை கொண்ட சிறுவர் விளையாட்டு மைதானமாகும்.




    i) அரை வட்டப் பகுதியின் ஆரையைக் காண்க

    ii) அரை வட்டப் பகுதியின் பரப்ளவைக் காண்க

    iii) செவ்வகப் பகுதியின் பரப்பளவு அரை வட்டப் பகுதியின் பரப்பளவிலும் $7 \text{ m}^2$ அதிகம் எனின் பக்கம் BC இன் நீளத்தைக் காண்க.

    iv) சிறுவர் விளையாட்டு மைதானத்தின் சுற்றளவைக் காண்க.

3. a) வருடாந்த வருமானத்திற்கு ஏற்ற வகையில் வருமான வரி அறவிடப்படும் விதம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வருட வருமானம் (ரூபா) | வருமான வரிச் சதவீதம் |
|---|---|
| முதல் 1 800 000 | வரிச் சலுகை |
| அடுத்து 600 000 | 6 % |
| அடுத்து 600 000 | 12 % |

வருடாந்த வருமானம் ரூபா 2 750 000 உடைய நபர் ஒருவர் செலுத்த வேண்டிய மொத்த வருமான வரியைக் காண்க.

b) மின் உபகரணம் ஒன்றின் இறக்குமதி தொகை ரூபா 30 000.

i) அதனை இறக்குமதி செய்யும் போது ரூபா 3 000 சுங்க வரி செலுத்த வேண்டியுள்ளது எனின் அறவிடப்படும் சுங்க வரிச் சதவீதத்தைக் காண்க

ii) மேலுள்ள உபகரணத்தை இறக்குமதி செய்த நபர் ஒருவர் ரூபா 7 000 இலாபம் பெறும் வகையில் விலையை நிர்ணயித்தார். அதற்காக 8 % VAT வரியும் செலுத்த வேண்டியிருந்தது எனின் அப் பொருளை வாங்கும் நபர் ஒருவர் செலுத்த வேண்டிய மொத்த தொகை காண்க

04. a) 1 தொடக்கம் 8 வரை இலக்கம் இடப்பட்ட அதிஷ்ட சக்கரம் ஒன்றை சுழற்றி, அம்புக்கறி எதிரே தோன்றும் இலக்கங்களின் அடிப்படையில் நிகழ்தகவு பரிசோதிக்கப்படுகிறது




i) S இன் மாதிரி வெளியை எழுதுக

ii) முதன்மை எண்கள் கிடைப்பதற்காக நிகழ்ச்சி A எனின் A இன் தொடையை எழுதுக

iii) முதன்மை எண் கிடைப்பதற்கான நிகழ்த்தகவு P(A) இனைக் காண்க

iv) இரண்டின் மடங்கு அல்லது மூன்றின் மடங்கு எண் கிடைப்பதற்காள நிகழ்த்தகவைக் காண்க

b) $\epsilon = \{ a,b,c,d,e,f,g\}$
$A = \{ b,c,d\}$
$A \cap B = \{ c,d\}$
தரப்பட்டுள்ள வென்உருவில் தகவல் களை குறித்துக் காட்டுக.



5) பாடசாலையின் தரம் 10 இல் கல்வி பயிலும் 144 மாணவர்களில் கலைப் பாடமாக சித்திரம், சஙகீதம், நடனம, நாட்டியம் ஆகிய பாடங்களல் ஏதாவது ஒன்றை தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு மானவனும் தாம் தெரிவு செய்த பாடம் தொடர்பான தகவல் வட்ட வரைபில் காட்டப்பட்டுள்து.




i) சங்கீத்தை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் என்ன பின்னமாகும்

ii) நடனத்தை தேர்ந்தெடுத்த மாணவர்களின் எண்ணிக்கை சங்கீதத்தை தேர்ந்தெடுத்த மாணவர்களின் எண்ணிக்கு சமனாவதோடு சித்திரத்தை தேர்ந்தொடுத்த மாணவர் தொகை நடனத்தை தேர்ந்தொடுத்த மாணவர்களை போல் மூன்று மடங்காகும் நடனத்தை தேர்தெடுத்த மாணவர்களின் ஆரைச் சிறைக் கோணத்தைக் காண்க.

iii) சித்திரத்தை தேர்ந்தொடுத்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க

iv) ஒரு மாதத்தின் பின்னர் சங்கீதத்தை கற்கும் மாணவர்ளில் 04 பேர் நடனத்தை கற்பதற்காக மாறினார்கள் மாறிய தரவுகளுக்கு அமைய வட்ட வரைபை வரைந்து நடனத்தை கற்கும் மாணவர்களின் ஆரைச் சிறைக் கோணத்தைக் காண்க.

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025/ Second Term Test - 2025

ශ්‍රේණිය / தரம் / Grade 10

# கணிதம் - II

කාලය / நேரம் / Time 03 மணி. 10 நிமி.

නම / பெயர் / Name ..........................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ..................................

**முக்கியமானது :**

- **பகுதி A, பகுதி B இல் தேரந்தொடுக்கப்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்**
- **வினாக்களுக்கு விடையளிக்கும் போது உரிய செய் முறைகளும் அலகுகளை தெரிவாகக் எழுதுக.**
- **ஆரை r உம் h உயரம் உடைய உருளையின் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.**
- **ஆரை r உடைய கோளத்தினகனவளவு $\frac{4}{3}\pi r^3$ ஆகும்**

## பகுதி A

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

01. வீடொன்றின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுதி ரூபா 64 000 ஆகும். நகர சபையானது சொத்துக் களுக்காக 8% இறைவரியை அறிவீடு செய்கின்றது. ஓராண்டின் பின்னர் வீட்டின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமதி மாற்றமடைந்ததோடு, நகர சபை அறவிடப்படும் ஆண்டு இறை வரிச் சதவீதம் 9% ஆக அதிகரித்தது. அச்சந்தர்ப்பத்தின் வீட்டு உரிமையாளர் காலாண்டு ஒன்றுக்காக செலுத்தும் இறைவரி ரூபா 340 இனால் அதிகரித்தது எனின் வீட்டின் தற்போதை மதிப்பீட்டுப் பெறுமதியைக் காண்க

02. $y = x^2 - k$ எனும் வளையியை வரைததற்காக x மற்றும் y ஆள்கூறுகளை உடைய பூர்க்தியாக்கப்படாத அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -3 | -2 | -1 | 0 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|
| y | 5 | 0 | -3 | -4 | -4 | -3 | ….. | 5 |

a) i) அட்டவணையின் சமச்சீர் தன்மையை கருதி x =2 ஆகும் போது y இன் பெறுமானம் காண்க

ii) x அச்சு வழியேயும் y அச்சு வழியேயும் 10 சிறு அலகுகள் ஒரு அலகாக கொண்டு மேலுள்ள வளையியை வரைக

b) உமது வரைபைக் கொண்டு

i) k இன் பெறுமானத்தைக் காண்க
ii) வளையின் திரும்பற் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக
iii) வளையி நேராக அதிகரிக்கும் x இன் பெறுமான வீச்சைக் காண்க
iv) மேலுள்ள வளையியை y அச்சின் வழியே நேர்த் திசையில் நான்கு அலகுகள் நகர்த்தும் போது பெறப்படும் வளையியின் சமன்பாட்டைக் காண்க

03. (a) கல்வி கண்காட்சி ஒன்றை பார்வையிடுவதற்காக 49 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கொண்ட குழுவொன்று சமூகமளிததனர். கண்காட்சியை பார்வையிடுவதற்காக மாணவர்களுக்கான அனுமதி பத்திரம் ரூபா 60 உம் ஆசிரியர்களுக்கான அனுமதிப் பத்திரம் 100 ரூபா ஆவதோடு அவர்கள் அனைவருக்கும் அனுமதிப் பத்திரத்திற்காக செலவிட்ட மொத்த தொகை ரூபா 3 100 ஆகும்.

i) மாணவர்களின் எண்ணிக்கை x எனவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை y எனுவும் கொண்ட ஒருங்கமை சமன்பாடு ஒன்றை உருவாக்குக.

ii) ஒருங்கமை சமன்பாட்டைத் தீர்த்து மானணிர்களின் எண்ணிக்கையையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் காண்க

(b) சுருக்குக. $\frac{2}{p+1} + \frac{4}{p^2-1}$

04. படத்தில் காட்டப்பட்டுள்ள தளவுருக்கள் A இனதும் B இனதும் பரப்புகள் சமனாகும். x இனால் ஆன இருபடிச் சமன்பாடு $x^2 + 3x - 40 = 0$ எனும் சமன்பாட்டை திருப்த்தி செய்கின்றது எனக் காட்டி, அதனைத் தீர்த்து A எனும் செவ்வகத்தின் நீள அகலங்களை வெவ்வேறாகக் காண்க.




05. (a) பசன் மேடடார் சைக்கிளில் A யில் இருந்து D வரை பயணம் செய்த தூர – நேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




i) பயனத்தின் முழுத் தூரத்தைக் காண்க

ii) A யில் இருந்து D வரையாக பயணத்தனி சராரி வேகத்தைக் காண்க

iii) A யில் இருந் B வரையான பயணத்தின் வேகத்தை மணிக்கு கிலோமீற்றரில் தருக.

iv) A யில் B வரை பயனம் செய்த அதே வேகத்துடன் முழுப் பயணத்தையும் நிறைவு செய்தான் எனின், அவன் பயணத்திற்காக செலவிட்ட காலத்தை எத்தனை நிமிடங்களால் குறைத்துக் கொள்ள முடியுமாகும்?

(b) 72 $kmh^{-1}$ எனும் சீரான வேகத்தில் பயணிக்கும் 120 m நீளமான புகையிரதம் ஒன்று சமிக்ஞை தூணைக் கடக்க எடுக்கும் நேரத்தைக் காண்க.

06) பொலிஸ் நிலையத்தின் சிறு முறைப்பாட்டுப் பிரிவிக்கு நாள்தோரும் கிடைக்கப் பெறும் முறைபாடுகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழ்ே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாளொன்றின் கிடைத்த முறைப்பாடுகள் (x) | நாட்களின் எண்ணிக்கை (f) | fx |
|---|---|---|
| 15 | 4 | |
| 16 | 6 | |
| 17 | 10 | |
| 18 | 15 | |
| 19 | 10 | |
| 20 | 5 | |
| | $\Sigma f=$ | $\Sigma fx=$ |

i) ஆகார வகுப்பைக் காண்க

ii) இடை பெறுமானத்தைக் கிட்டிய முழு எண்ணிற்கு காண்க

iii) ஒரு நாளில் கிடைக்கப் பெற்ற முறைபாடுகளின் 18 விட அதிகம் பெற்ற நாட்களின் எண்ணிக்கை முழு நாட்களில் எண்ணிக்கையின் சதவீதமாகத் தருக



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

## பகுதி B

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

07) மாணவன் ஒருவன் தீக்குச்சிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கோலமொன்றின் ஆரம்பப் படிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.



i) முதல் கோலத்தில் உள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கை 4 எனின் முதல் 3 கோலங்களில் உள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகக் காண்க.

ii) கோலத்தின் பொது உறுப்பைக் காண்க

iii) 10 ஆவது கோலத்தை அமைக்கத் தோவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கையைக் காண்க

iv) 51 தீக்குச்சிகளை பயன்படுத்தி எத்தனையாம் எண்கோலத்தை அமைக்க முடியும்

v) மேலுள்ள கோலத்தில் 9,10 மற்றும் 11 எனும் கோலங்களில் உள்ள மொத்த தீக்குச்சிகளின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகை 100 வி குறைவு அம் மாணவன் கூறினார். இக் கூற்று உண்மையானதா?

08) cm/mm அளவிடையில் உள்ள நேர் விளிம்பு கவராம் ஆகிய வற்றை உபயோகித்து

i) AB= 6cm $A\hat{B}C = 120^0$ , BC = 4cm ஆகுமாறு முக்கோணி ABC இனை அமைக்க

ii) C இல் இருந்து நீட்டப்பட்ட AB இற்கு செங்குத்து ஒன்றை அமைக்க அது AB வெட்டும் புள்ள D எனக் குறிக்க

iii) புள்ளிகள் A மற்றும் D இற்கு சமதூரத்தில் அசையும் ஒழுக்கை வரைந்து அது AC இணை சந்திக்கும் புள்ளி O எனக் குறிக்குக.

iv) O வை மையமாகவும் OA இனை ஆரையாகவும் உடைய வட்டத்தை வரைக.

09) மடக்கை அட்டவணையை பயன்படுத்தாது பெறுமானம் காண்க

(a) $\log_{10} 150 + \log_{10} 8 - \log_{10} 12$

(b) தீர்க்க $\log_a x - \log_a 5 = \log_a 36 - \log_a 4$

(c) $P = \frac{108 \times a}{3\pi}$ எனும் சுத்திரத்தின் a = 5.4 உம் 3 a = 9.42 உம் எனின் P இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திக் காண்க.

10) ABC எனும் முக்கோணியின் AC= BC ஆகும். $A\hat{B}C$ மற்றும் $A\hat{B}E$ இன் இரு சமகூறாக்கிகள் E இல் சந்திக்கின்றன. $A\hat{B}E = a^0$ எனின்,

(a) கீழுள்ள ஒவ்வொரு கோணங்களைளும் $a^0$ சார்பாகக் காண்க

i) $B\hat{A}C$ ii) $A\hat{C}D$ iii) $B\hat{E}C$

(b) BCE ஓர் சமபக்க முக்கோணி எனக் காட்டுக

(c) AB//CE எனக் காட்டுக.



11. ABC எனும் முக்கோணியின் AB= AC ஆகும். BC இன் நடுப்புள்ளி D ஆகும். CB இற்கு செங்குத்தாக BE வரையப்பட்டுள்ளதோடு AB= DE ஆகும்.




i. Δ ABD ≡ Δ ACE எனக் காட்டுக

ii. ΔABD ≡ ΔBED எனக் காட்டுக

iii. ABED ஓர் இணைகரம எனக் காட்டுக

12. ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் மாத்திரம் கற்பிக்கப்படும் கலவன் பாடசாலை ஒன்றின் தரம் 10 கல்வி கற்கும் மாணவர்கள் தொடர்பான தகவல், கீழுள்ள பூத்திசெய்யப்படாத வென் உருவில் காட்டப்பட்டுள்ளது.




மொத்த மாணவர் தொகை 250 ஆவதோடு அதில் 110 பேர் ஆண் மாணவர்கள். ஆங்கில மொழியில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 60 ஆகும்.

i) தரப்பட்டுள்ள வென் உருவைப் பயன்படுத்தி தரப்பட்டுள்ள தகவல்களை குறிக்க

ii) வென் உருவில் நிழற்றப்பட்ட பிரதேசத்தை குறிக்கும் மாணவர்களை இனங்காண்க

iii) தமிழ் மொழி மூலம் கல்வி கற்கு மாணவிகளின் எண்ணிக்கையைக் காண்க.

iv) ஆங்கில மொழியில் கல்வி கற்ற 6 மாணவிகளும் 2 ஆண் மாணவர்களும் தமிழ் மொழி மூலம் கற்பதற்காக தமது மொழி மூலத்தை மாற்றிக் கொண்டனர். இத் தகவல்களை கீழுள்ள வென் உருவில் குறித்து காட்டுக.







සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# 10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 300




Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 200




Rs : 300




Rs : 350




Rs : 300




Rs : 300




Rs : 150




Rs : 200




Rs : 150




Rs : 300




Rs : 300




Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE